பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2053 | தை 14 | வியாழக்கிழமை | 27.01.2022 | கதிர் 309

சாரதியை இலக்குவைத்து

## அம்புலன்ஸ் மீது துப்பாக்கிச் சூடு!

களுத்துறை, பாணந்துறை கேதுமதி வைத் தியசாலைக்கு முன்பாக இன்று காலை துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனந்தெரியாத நபர்கள் சிலர், ☞2

# வவுனியா பல்கலை, கல்வியியல் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்குக் கொரோனா!

(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கல்வியயல் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இருவருக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அவர்கள் கொண்டு வரப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் கொரோனாத் ☞2

# நாளாந்தம் 2 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## நிலைமை மேலும் தீவிரமடையலாம் என்று சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை




இலங்கையில் நாளாந்தம் சுமார் இரண்டாயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண இது குறித்து ஊடகங்களிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் தற்போது இனங்காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பாரி யளவில் அதிகரித்துள்ளது. சரியான தரவுகள் ஊட கங்களில் வெளியாகாவிட்டாலும் நாளாந்தம் 2 ஆயிரம் போர் வரையிலான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப் படுகின்றனர். ☞2

## டெங்கும் தாண்டவம்!

### 26 நாள்களில் 6,896 பேர் பாதிப்பு




இலங்கையில் தற்போது டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் நேற்று வரையான 26 நாள்களில் 6 ஆயிரத்து 896 டெங்கு ☞2

## நாட்டை முடக்காமல் கட்டுப்படுத்த முயற்சி



### பிரதி சுகாதாரப் பணிப்பாளர் கூறுகின்றார்

நாட்டை மீண்டும் முடக்காமல் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றோம். இதற்குப் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ☞2

## இரு வேறு இடங்களில் ஆண், பெண் சடலங்கள்

### அடையாளம் காணப்படவில்லை

இருவேறு இடங்களில் அடையாளம் காணப்படாத இருவரின் சடலங்களைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இரத்தினபுரி, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருகங்கையிலிருந்து அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். ☞2

## மோடிக்கு ஆவணம் அனுப்பிய கட்சிகள் நாளை ஊடக சந்திப்பு



இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தில் ஒப்பமிட்ட ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இணைந்து நாளை யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணம் தொடர்பில் மற்றுமொரு தமிழ்க் கட்சியான தமிழ்த் ☞2

## வீட்டில் தனித்திருந்த வயோதிபப் பெண் படுகொலை; தங்க நகைகளும் அபகரிப்பு

### சாய்ந்தமருதில் கொடூரம்

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது 15ஆம் பிரிவு, புதுப்பள்ளி வீதியில் உள்ள வீட்டில் தனித்திருந்த வயோதிபப் பெண் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆறு ஆண் பிள்ளைகளின் தாயாரான புஹாரி என்ற 85 வயதுடைய குறித்த பெண் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்த தங்க நகைகளும் கொலைகாரனால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த பெண்ணின் தலைப் பகுதியில் பாரிய அடிகாயம் ஒன்று காணப்படுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் பிள்ளைகள் திருமணம் முடித்து பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். ☞2

## பாண்டியன்குளம் விபத்தில் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களில் ஒருவர் உயிரிழந்தமையுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.



மற்றொருவர் படுகாயம்

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திர நிக்கசீல என்பவரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## இரு வேறு இடங்களில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
70 வயது மதிக்கத்தக்க 5 அடி 5 அங்குலம் உயரமுடைய நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

இதேவேளை, கண்டி, கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இல்வத்துர பிரதேசத்தில் மஹாவலி கங்கையில் மிதந்து வந்த பெண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

50 வயது மதிக்கத்தக்க 5 அடி உயரமுடைய பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு சடலங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீட்டில் தனித்திருந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பெண் வீட்டில் நேற்றிரவு தூங்கிக்கொண்டிருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த கொலைகாரன் அவரைத் தாக்கிக் கொலைசெய்துவிட்டு அவரிடமிருந்த தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவரது நான்காவது மகன் வழமை போன்று காலை உணவை வழங்கத் தாயார் வீட்டுக்கு வந்தபோதே இந்தச் சம்பவத்தைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாய்ந்தமருதுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாண்டியன்குளம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாண்டியன்குளம், செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த விமல் விக்னேஷ் என்பவர் படுகாயமடைந்த நிலையில், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிளும், நெல் வெட்டும் இயந்திரம் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமும் மோதி குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உழவு இயந்திரத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பாண்டியன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மோடிக்கு ஆவணம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய மக்கள் முன்னணி தவறாகப் பிரசாரம் மேற்கொண்டுவரும் நிலையிலேயே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை காலை 10 மணியளவில் யாழ். நகரிலுள்ள யு.எஸ். விடுதியில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெறவுள்ளது.

## டெங்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஷிலந்தி செனவிரத்ன தெரிவித்தார்.

மக்கள் தமது சுற்றுச்சூழலை டெங்கு நோய் பரவாத வகையில் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## நாட்டை முடக்காமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் கொரோனா சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 25 கட்டில்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அதனைச் சமாளிக்கக்கூடிய வளம் உள்ளது. பழைய நடைமுறை பின்பற்றப்படும். அத்துடன், வைத்தியசாலைகளில் போதுமானளவு 'ஒட்சிசன்' உள்ளது. எனவே, வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை மற்றும் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வெளியாகும் தகவல்கள போலியானவை.

நாட்டை மீண்டும் முடக்குவதை நினைத்தும்பார்க்க முடியாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருக்கப் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். வைரஸ்பரவலைக் கட்டுப்படுத்தப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏற்கனவே நாடு முடக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்கள் இன்னும் எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கின்றன - என்றார்.

## நாளாந்தம் 2 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளாந்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளமையை யடுத்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதனால் வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளன.

அதேபோன்று அநேகமான சிகிச்சை மத்திய நிலையங்களிலுள்ள இடவசதி நிறைவடைந்துள்ளது. கடந்த காலங்களில் செயற்பட்டு வந்த அநேகமான சிகிச்சை மத்திய நிலையங்கள் மீணடும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமை எதிர்காலத்தில் சுகாதாரத்துறையினரால் சமாளிக்க முடியாத அளவுக்கு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கலாம். தற்போதுள்ள நிலைமை எதிர்காலத்தில் மேலும் தீவிரமடைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. - என்றார்.

## வவுனியா பல்கலை, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வவுனியா தேசிய கல்வியல் கல்லூரி மாணவர்கள் 50 பேருக்கு எழுமாறாக துரித அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில், மேலும் 18 பேருக்குத் தொற்று உறுதியானது.

அத்தோடு, வவுனியா பல்கலைக்கழகத்தில் காய்ச்சல் உள்ளிட்ட கொரோனா அறிகுறிகள் தென்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனடிப்படையில், வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியில் 20 பேருக்கும், வவுனியா பல்கலைக்கழகத்தில் 16 பேருக்குமாக 36 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)

## அம்புலன்ஸ் மீது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்புலன்ஸ் வாகனத்தின் சாரதியை இலக்குவைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது அம்புலன்ஸ் வாகனம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய போதிலும் சாரதி உயிர்தப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## '13' தீண்டத்தகாததா?

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு முகவரியிடும் பொது ஆவணம் ஒன்றில் – கடிதம் ஒன்றில் – ஒப்பமிடுவதற்குத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் தயாரான போதே, பிரிப்புக் கோடு உறுதியாக வரையப்பட்டதாயிற்று. அதனை இப்பத்தியில் ஏற்கனவே தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.**

**கோட்டின் ஒரு புறத்தே தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவை எனத் தம்மை சுயமாகக் கூறிக் கொள்ளும் கட்சிகள் எல்லாம். மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் தனியாக.**

**ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து இயங்குவதில் சில ஒதுக்கீடுகளைக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, இந்தக் கூட்டு ஆவணத் தயாரிப்பில் பங்குபற்றாமையை ஒரு பெரிய விடயமாக யாரும் நோக்கவில்லை. முன்னணியின் போக்கும் பண்பும் பிடிவாதமான செயற்பாடும் அத்தகையதே என்று கருதி அனைவரும் அதை ஒரு பெரிய விடயமாக எடுத்துக் கொள்ளவில்லை.**

**எனினும் 13 ஆவது திருத்தம் என்ற விடயத்தையே கேள்விக்குரிய விவகாரமாக முன்நிறுத்தி அதனடிப்படையில் அரசியல் சாதகத்தைச் சம்பாதிக்க வியூகம் வகுத்தது தேசிய மக்கள் முன்னணி. 13 ஐக் கட்டிப்பிடித்திருக்கும் தமிழ்க் கட்சியினர், அதன் மூலவம் தமிழ் மக்களின் முதுகில் குத்திவிட்டன என்ற கருத்தியலை மையநாராக வைத்துக் கொண்டு, தமது எதிர்ப்பு அரசியலைக் கனகச்சிதமாகக் கட்டி எழுப்புவதற்கான காய்களைத் தந்திரோபாயமாக முன் நகர்த்துகின்றது முன்னணி.**

**வரும் ஞாயிற்றுக்கிழமை அக்கட்சி தடல் புடலாக – ஆரவாரமாக – பெரும் எடுப்புகளோடு – நடத்தத் திட்டமிட்டிருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்புலம் அதுதான்.**

**புலம்பெயர் தேசத்திலும் களத்திலும், தீவிரத் தமிழ்த் தேசியப் போக்குள்ள ஆதரவுத் தரப்பை இந்த அரசியல் காய் நகர்த்தல் மூலம் வளைத்துப்போட்டுக் கைக்குள் கொண்டு வந்து விடலாம் என்பது கஜேந்திரகுமார் – கஜேந்திரன் அணியின் சிந்தனைப் போக்கு.**

**இன்றைய உலக அரசியல் போக்கிலே தமிழ்த் தேசிய இலக்கு அரசியலை தீவிர முனைப்புக் கருத்தியலில் முன்கொண்டு நகர்த்துவது கத்திமேல் நடப்பது போன்றது. அதுவும் நோக்கும் இலக்கும் தீவிரப் போக்குக் கொள்கையாக இருந்து, அதனை எட்டுவதற்கான மார்க்கம் தொடர்பில் திட்டவட்டமான ஒழுங்குகள் இல்லாமல் – தெளிவான வரையறை இல்லாமல் – செயற்பட முற்பட்டால் அது வினையை விலைக்கு வாங்கும் விவகாரமாகவே மாறிவிடும்.**

**13 ஐயும் அதன் கீழான மாகாண சபையையும் தீண்டவே லாயக்கற்றவை என்று சீறும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அதன் கீழான மாகாணசபைத் தேர்தலையும் முதலமைச்சர் பதவியையும் இலக்கு வைத்து காய் நகர்த்துவது ஏன் என பிற தமிழ்த்தேசியக் கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.**

**இந்தப் பின்புலத்தில் வரும் மாகாணசபைத் தேர்தலையும் பகிஷ்கரிக்கும் முடிவைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எடுக்கலாம் என்று செய்தி வெளியாகியிருக்கின்றது.**

**அது உண்மையோ பொய்யோ தெரியவில்லை. அப்படி ஒரு முடிவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எடுக்கும் என்றால் நாடாளுமன்றத்தில் தாங்கள் வைத்திருக்கும் இரண்டு எம்.பி. பதவிகளையும் கூட அக்கட்சி துறக்கத் தான் வேண்டியிருக்கும்.**

**மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொள்ளாமை காரணமாக அத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதாயின் –**

**அதேபோல தமிழர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒற்றையாட்சி அரசமைப்பு தமிழர்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப் பட்டிருப்பதை ஆட்சேபித்து, ஏற்றுக் கொள்ளாத அந்த ஒற்றையாட்சி அரசியலுக்கு – அரசமுறைமைக்கு – விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்து ஏற்றிருக்கும் எம்.பி. பதவியையும் தொடர முடியாதல்லவா?**

**மாகாண சபை முறைமையை ஏற்காத காரணத்தால் அந்தத் தேர்தலைப் புறக்கணிப்பது போல, ஒற்றையாட்சியைத் திணிக்கும் பௌத்த – சிங்கள நாட்டின் அரசமைப்பை ஏற்காத காரணத்தால் அந்த எம்.பி. பதவிகளை அவர்கள் துறக்க வேண்டி வந்துவிடும்.**

# போதைப் பொருள்களை விரைவில் அழிக்க திட்டம்!



கைப்பற்றப்படும் சட்டவிரோத போதைப் பொருள்களில் விசாரணைக்கான ஒரு தொகையை மாத்திரம் வைத்துவிட்டு ஏனையவைகளை மஜிஸ்திரேட் முன்னிலையில் உடனடியாக அழிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றமையால் அவை மறுசீரமைக்கப்பட்டு வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பான சட்ட மறுசீரமைப்பு மற்றும் சட்ட வரைவைத் தயாரிக்கும் பணியில் நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு ஹெரோயின் போதைப் பொருள்களுடன் கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டபோது அவற்றைப் பார்வையிடச் சென்ற வேளையிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, மீன்பிடிக்கும் பாணியில் போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுப்பட வேண்டாம் என்று மீனவர்களிடம் வேண்டுகோள் விடுத்த பாதுகாப்புச் செயலாளர், அவ்வாறானவர்கள் சட்டத்துக்கு முன்கொண்டுச் செல்லப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

அரசபுலனாய்வுசேவை, பொலிஸ்போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் கடற்படை இரு வாரங்களாக மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் பிரதிபலனாக சுமார் 350 கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளதுடன் 11 உள்ளூர் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை போன்று இரு மீன்பிடி படகுகளில் சென்றுள்ளனர். இவற்றில் ஒரு படகு வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மேற்படி போதைப் பொருளை ஆழ்கடலில் வைத்து தமது மீன்பிடிப் படகிற்கு மாற்றியுள்ளதுடன் மற்றைய படகு அவற்றைக் கொண்டுவர சென்றுள்ள நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். – என்றார்.

ஒருங்கிணைந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அவர், போதைப்பொருள் பிரபுக்களால் கட்டுப்படுத்தப்படும் சட்டவிரோத போதைப்பொருள் கும்பலைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. – எனத் தெரிவித்தமையுடன், நாங்கள் எதிர்காலத்திலும் இதேபோன்ற நடவடிக்கைகளைத் தொடருவோம் எனக் கூறினார்.

சட்ட அமுலாக்க முகாமைகளின் ஆதரவுடன் கடல் வழிகள் வழியாக சட்டவிரோத போதைப்பொருள் ஊடுருவலைத் தடுக்க நாங்கள் பாடுபடுகிறோம் என்று உறுதியளித்தார், இது கிட்டத்தட்ட 350 கிலோ போதைப் பொருள் கடத்தல் சந்தேக நபர்களுடன் பொலிஸ் போதை தடுப்பு பணியகத்திடம் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படும் எனப் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

போதைப்பொருள் அற்ற நாட்டைக் காண்பதற்காக கடற்படைத் தளபதி, சம்பந்தப்பட்ட சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள், சமுதுர கடற்படை கப்பலின் குழுவினர், பொலிஸ் போதை தடுப்பு பணியக அதிகாரிகள் மற்றும் அரச புலனாய்வுச் சேவைகளின் குழுவினர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமைக்காக அவர்களை அவர் பாராட்டினார். இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள போதைப் பொருள்களின் சந்தை பெறுமதி சுமார் 3 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவுக்குத் அதிகமென நம்பப்படுவதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

## கட்டுவன் – மயிலிட்டியில் விடுவிக்கப்பட்ட வீதிகளைப் பார்வையிட்டார் அங்கஜன் எம்.பி.!





யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன் – மயிலிட்டி வீதியின், விடுவிக்கப்பட்ட 400 மீற்றர் வீதியைப் பார்வையிடும் களவிஜயமொன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் மேற்கொண்டார்.

இதன்போது, 'பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்பச் செயற்பாடாக இந்த வீதி விடுவிப்பைக் கருதவேண்டியது அவசியமானதாகும் என அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கொவிட் தொற்றுடன் இணைந்த டெங்கு!

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

இலங்கையில் கொவிட் தொற்றைப் போன்று டெங்கு தொற்றும் அதிகரித்துள்ளதாக சீமாட்டி ரிட்ஜே வைத்தியசாலை அறிவித்துள்ளது. வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி தீபால் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

காய்ச்சல் மற்றும் ஏனைய குணங்குறிகளால் பாதிக்கப்படுபவர்கள், குருதி அணுக்களின் எண்ணிக்கை தொடர்பில் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை சிறுவர்கள் மத்தியில் கொவிட் தொற்றுக்கள் அதிகரித்துள்ளன. கடந்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டு சிகிச்சை அறைகள் அதிகரிக்கப்பட்டு தற்போது மூன்று சிகிச்சை அறைகளில் கொவிட் தொற்றுக்கு உள்ளான சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

இந்தநிலையில் நோய் தொற்றுக் கண்டவர்கள் மத்தியில் சுவாசப் பிரச்சினை இருந்தால் மாத்திரம், வைத்தியசாலைகளை நாடுமாறும் ஏனைய குணங்குறிகள் உள்ளவர்கள் 1390 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு வீடுகளிலேயே, சிகிச்சை முறைகளைகையாளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

# மலேசியாவில் ஆவணங்களற்ற புலம்பெயர்ந்தவர்கள் கைது



மலேசியாவின் சாபா மாநிலத்தில் உள்ள Putatan பகுதியில் மலேசிய குடிவரவுத் துறையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் ஆவணங்களற்ற 32 புலம்பெயர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆள் நடமாட்டமில்லாத இரண்டு கட்டடங்களில் நடத்தப்பட்ட Operation Patuh Bersepadu எனும் தேடுதல் நடவடிக்கையின் மூலம் இவர்கள் கைது செய்யப்படுள்ளனர் எனச் சாபா குடிவரவுத்துறை இயக்குநர் சலிஹா ஹபிப் தெரிவித்திருக்கிறார்.

முதலில் குடிவரவுத்துறையினரால் ஆவணங்கள் பரிசோதனைக்காக 124 பேர் சுற்றி வளைக்கப்பட்டனர். அதில் 32 பேரிடம் முறையான ஆவணங்கள் இல்லை என்பதால் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் கைது செய்யப்பட்ட 32 புலம்பெயர்ந்தவர்களில் 14 பேர் ஆண்கள், 11 பெண்கள், 7 பேர் குழந்தைகளாவர்.

இவர்களை குடிவரவுத்துறையின் தடுப்பு மையத்திற்கு அனுப்புவதற்காக இவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்பதை அறிய கொரோனாச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என குடிவரவுத்துறை இயக்குநர் சலிஹா ஹபிப் கூறியிருக்கிறார்.

## அயர்லாந்துக்கு ஆதரவாக படைகளை அனுப்பும் நேட்டோ!

தங்களின் கடல் எல்லை அருகே ரஷ்யா போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அயர்லாந்துக்கு ஆதரவாக, அந்தப் பிராந்தியத்துக்கு கூடுதல் படைகளை நேட்டோ அனுப்பி வருகிறது.

நேட்டோவின் கூட்டாளிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தங்களது அமைப்பு மேற்கொள்ளும் என்று அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூளுரைத்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் பால்டிக் கடல் பிராந்தியத்தில் தங்களது பலத்தை அதிகரித்துக்கொள்ளும் வகையில் கூடுதல் படைகள் மற்றும் தளவாடங்களை நேட்டோ அனுப்பி வருகிறது.

இதனிடையே அமெரிக்கா தலைமை வகிக்கும் நேட்டோ அமைப்பைச் சேர்ந்த டென்மார்க், லிதுவேனியாவில் எஃப் – 16 வகை நவீன போர் விமானங்களைக் குவித்து வருகிறது.

ஸ்பெயினும் பல்கேரியாவுக்கு போர்க் கப்பல்களை அனுப்ப முடிவு செய்துள்ளது. விரைவில் அந்த நாட்டுக்கு போர் விமானங்களையும் ஸ்பெயின் அனுப்பலாம் என்று தெரிகிறது.

இதுதவிர, ரேமேனியாவுக்கு அனுப்புவதற்காக கூடுதல் படையினரை பிரான்ஸ் தயார் நிலையில் வைத்துள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ அமைப்பு விரிவுபடுத்தப்படக் கூடாது என்று ரஷ்யா வலியுத்தி வரும் நிலையில், இந்த நடவடிக்கையால் இரு தரப்பினருக்கும் இடையே பதற்றம் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அயர்லாந்து கடற்கரைக்கு 240 கி.மீ. தொலைவிலுள்ள சர்வதேச கடல் பகுதியில் ரஷ்யா இராணுவப் பயிற்சியில் அடுத்து வரும் வாரங்களில் ஈடுபடவுள்ளது.


அது சர்வதேசக் கடல் எல்லையாக இருந்தாலும், அந்தப் பகுதி அயர்லாந்தின் பொருளாதார மண்டல எல்லைக்குள் அடங்குகிறது.

உக்ரைன் எல்லையில் படைகளைக் குவித்துள்ள ரஷ்யா அந்த நாட்டை ஆக்கிரமிக்கும் என்ற அச்சம் நிலவி வரும் சூழலில், இத்தகைய போர்ப் பயிற்சிகளை வரவேற்க முடியாது என்று அயர்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாப்பதற்காக கடந்த 1949ஆம் ஆண்டில் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## புடினுக்கு எதிராக தனிப்பட்ட தடை ஜோ பைடன் முன் எச்சரிக்கை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மீது தடை விதிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமிக்குமாயின் இவ்வாறு தடை விதிக்கப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா தமது தென் மேற்கு எல்லையிலுள்ள நாட்டின் மீது நடவடிக்கை எடுக்குமாயின், பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் கூறியுள்ளார்.

ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்து வரும் நிலையில் அமெரிக்கா தடை குறித்து அறிவித்துள்ளது. இதேவேளை, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தேவையற்ற பதற்றத்தை தோற்றுவிக்கின்றன என ரஷ்யா குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## நாஜி வணக்கம் செலுத்திய பெண்ணுக்கு அபராதம்!

ஹிட்லரின் வதை முகாமான ஆஷ்விட்ஸ் பிர்கெனாவ் வதை முகாம் இருந்த இடத்தில், நாஜி வணக்கம் செலுத்தியதற்காக நெதர்லாந்து பெண்ணொருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

டச்சு சுற்றுலாப் பயணியான 29 வயதான பெண், நாஜி வணக்கம் செலுத்தியதற்காக போலந்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

பெயர் குறிப்பிடப்படாத பெண், Arbeit Macht Frei (Work Sets You Free) நுழைவாயிலின் முன் சைகை செய்தார். அப்போது அதை அவரது கணவர புகைப்படமெடுத்தார்.

போலந்தில் நாஜி பிரசாரத்தை ஊக்குவித்ததற்காக வெளிநாட்டவர்கள் தடுத்து வைக்கப்படுகின்றமை இது முதல் முறையல்ல. இதற்கு அங்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

2013ஆம் ஆண்டில், இரண்டு துருக்கிய மாணவர்கள் தலா ஆறு மாத சிறைத்தண்டனையை எதிர்கொண்டனர். 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் போலந்தை ஆக்கிரமித்த பின்னர் நாஜி ஜேர்மனி, தெற்கு போலந்து நகரமான ஓஸ்விசிமில் இந்த வதை முகாமைக் கட்டியது

## பாகிஸ்தானின் உச்ச நீதிமன்ற நீதிபதியாக முதல் பெண் பதவியேற்பு

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாக, 55 வயதான ஆயிஷா மாலிக் பதவியேற்றுள்ளார்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாட்டில் அவர் 16 ஆண் நீதிபதிகள் பணியாற்றும் நீதிமன்றத்தில் பெண் நீதிபதியாக பணியாற்றுவார்.

இவரது பதவியேற்பு தொடர்பில் கருத்து தெரிவித்த சில வழக்கறி ஞர்களும் செயல்பாட்டாளர்களும், பாகிஸ்தானின் ஆண் ஆதிக்க சமூகத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கான பல தசாப்த போராட்டத்திற்குப் பிறகு கிடைத்த அரிய வெற்றி இது, என்று தெரிவித்தனர்.

சில வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள் ஆயிஷாவின் நியமனத்தை எதிர்த்தனர். ஏனெனில் அவர் நீதிபதி பதவிக்கு முன்மொழியப்பட்ட மற்றவர்களை விட பணி மூப்பில் குறைந்த அனுபவம் உடையவராகக் காணப்பட்டார்.

பாகிஸ்தானின் நீதித்துறை, வரலாற்றுபூர்வ பழைமைவாதத்தையும் ஆண் ஆதிக்கத்தையும் கொண்டது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, இதுவரை பெண் உச்ச நீதிமன்ற நீதிபதி இல்லாத ஒரே தெற்காசிய நாடு இதுவாக இருந்தது.

மேலும், பாகிஸ்தானின் உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 4வீதம் மட்டுமே பெண்கள். பாகிஸ்தான் சட்டக் கல்லூரி மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற நீதிபதி ஆயிா மாலிக், கடந்த இருபது ஆண்டுகளாகக் கிழக்கு பாகிஸ்தானில் உள்ள லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றினார்.

மாகாணத்தில் ஆணாதிக்க சட்ட விதிகளை சவால் செய்வதில் அவர் ஒரு முக்கிய பங்கை வகித்தார். கடந்த ஆண்டு, பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்களிடம் நடத்தப்படும் பரிசோதனையின் போது கன்னித்தன்மை



சோதனைகள் என்று அழைக்கப்படும் சர்ச்சை பரிசோதனை முறைக்கு அவர் தடை செய்தார்

# வடக்கு தலைவர்களின் சதியில் இருந்து காப்பாற்றவே மக்கள் வாக்களித்தார்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு




கிழக்கு மாகாணத்தின் தனித்துவம்பற்றி பேசிய வரை வடக்கு தலைவர்கள் அழிக்க நினைக்கின்றார்கள் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இளைஞர், யுவதிகள் அதிகூடிய வாக்கையளித்து கௌரவத்துடன் சிறையிலிருந்து மீட்டெடுத்தனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுங்கான்கேணி கிராமத்துக்கான பிரதான வீதியை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வடகிழக்கில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் அதிகூடிய விருப்புவாக்கு எனக்குக் கிடைத்தது. அதற்கு காரணம் இந்த மண்ணை நம்பி பணியாற்றியவன், கிழக்கு மாகாணத்தின் தனித்துவம்பற்றி பேசியவரை வடக்கு தலைவர்கள் அழிக்க நினைக்கின்றார்கள் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இளைஞர் யுவதிகள் அதிகூடிய வாக்கையளித்து கௌரவத்துடன் சிறையிலிருந்து மீட்டெடுத்தனர்.

நான் சிறையிலிருந்து வெளிவரும்போது கொவிட் தொற்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை விரைவாக அமுலாக்குவதில் மிகப்பெரிய சங்கடங்களும் உள்ள சூழ்நிலையில்தான் உள்ளோம்.

இருந்தபோதிலும் நாங்கள் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் ஓர் இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொண்டுவருகின்றோம். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஒரு தனித்துவமான கட்சி. எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் கூட்டு வைத்துவைத்துள்ளது.

அந்த கட்சியின் உறுப்பினர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவுள்ளார். ஓர் இணக்கப்பாட்டுடன் நாங்கள் செயற்படுவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் தொற்றின் காரணமாகக் கடுமையான நெருக்கடிகளுக்கும் மத்தியில் பல அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம், பலவற்றைச் செய்துவருகின்றோம்.

நான் கல்வைத்தேன் என்பதற்காக கட்டப்படாமலிருந்த பொதுநூலகத்துக்காக கட்டப்பணிக்கு நான் 200மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடுசெய்து பணி நடைபெற்றுவருகின்றது. இந்தக் கொரோனாத் தொற்று அதிகரிக்காத நிலையிருந்தால் மேமாதம் அல்லது அதற்கு பின்னர் நூலகம் திறந்துவைக்கப்படும்.

அதேபோன்று 62கிலோமீற்றர் பாதைகளை புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 100 கிலோமீற்றர் முதல் கட்ட அனுமதி எனக்கு கிடைத்திருந்தது. இரு வாரத்தில் மேலும் 40கிலாமீற்றர் வீதிவரவுள்ளது. பல அபிவிருத்தி சார்ந்த நிதிகளை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம்.

இந்த நன்மைகள் ஊடாக கிராமங்களில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். கல்வியும் பொருளாதாரமும் இல்லையென்றால் மிகவும் பின்தங்கிய நிலைக்குசென்றுவிடும். அதனைக் கட்டியெழுப்புவதற்கான தளம் இன்னும் எங்களுக்கு போதாததாகவேயுள்ளது.

நாங்கள் எமது பிரதேசத்தின் உற்பத்தி துறையினை சர்வதேசத்தின் தரத்துக்கு கொண்டுசெல்வதற்கான கல்விதுறையை நாங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். அதேபோன்று தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கு இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான மொழியறிவுகளை வழங்குவதற்குக் கிராம மட்ட கற்பித்தல்செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். எனத் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரசியல் அழுத்தங்களால் இடமாற்றம் கோர வேண்டாம்

## கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு




கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக நிரந்தர அரச சேவையில் இணையும் எவரும் அரசியல் அழுத்தங்களால் இடமாற்றம் கோர வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அறிவித்துள்ளார்.

குறித்த நபர் பெறும் முதல் நியமனத்தில் 5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் தனக்குக் கிடைத்த பணியின் கண்ணியத்தைக் காத்து நல்ல பொதுச் சேவையை ஆற்றி நாட்டுக்கு பாரமாக இல்லாமல் ஓய்வுபெற வேண்டும்

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு இன்று காலை திருகோணமலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் –

நீங்கள் அனைவரும் இலவசக் கல்வியின் பயனாளிகள். பல்கலைக்கழகம் வரை நீங்கள் அந்த இலவசக் கல்வியைப் பெற்றிருந்தீர்கள். பல்கலைக்கழக அளவில் இவ்வளவு இலவசக் கல்வியை வழங்கும் நாடு வேறு எங்கும் இல்லை. நாடு உங்களுக்காக செய்த கடமையை ஒருபோதும் மறந்து விட வேண்டாம்.

அனைத்து பட்டதாரிகளுக்கும் அரசாங்க வேலை வழங்குவது என்பது ஓர் அரசால் செய்ய முடியாத ஒன்று. ஆனால் எங்கள் அரசாங்கம் அந்த சவாலை ஏற்றுக்கொண்டது.

அரச வேலை கிடைத்தவுடன், அரச சேவை செய்ய வேண்டும் என்ற பொறுப்பை மறந்து விடாதீர்கள். எங்களிடம் வரும் அப்பாவி மக்களுக்கு அந்த சேவையை அன்புடன் வழங்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் படிகோரள, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) பி.எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சபையின் கீழ் 2 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி 600 பட்டதாரிகளுக்கு மாத்திரமே இன்றைய நிகழ்வில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. ஏனைய 1,400 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு



திருகோணமலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலாளரினால் நேற்று மாவட்டச்செயலகத்தில் இவ் உத்தியோகத்தர்களுக்கான பாராட்டுக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யுத்தம் மற்றும் சுனாமியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்று திருகோணமலை மாவட்டம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரச உத்தியோகத்தர்களாகிய நாம் அனைவரும் கைகோர்த்து இயன்றவரை அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றமை மிகவும் அவசியமானது என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ன படிகோரள இந்த நிகழ்வில் தெரிவித்தார்.



# அன்னமலை மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வருடாந்த உயர்தர தினவிழா

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வருடாந்த உயர்தர தினவிழா உயர்தரமாணவர் ஒன்றியத் தலைவர் செல்வி நடராஜா கோபிகா தலைமையில் பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சீ.பாலசிங்கனின் வழிகாட்டலில், பிரதிஅதிபர் திருமதி நிலாந்தினி ரவிச்சந்திரனின் நெறிப்படுத்தலில் உயர்தர தினவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையின் வருடாந்த உயர்தரதின விடுகைதினமலரான 'நவீனம்' சஞ்சிகை வெளியிட்டுவைக்கப்பட்டது. இதழாசிரியர் செல்வி கந்தசாமி ராதிகா அறிமுக உரை நிகழ்த்தினார்.

உதவி அதிபர்களான என்.வன்னியசிங்கம், திருமதி சு.ருபன், கி.ஜெகதீசன், திருமதி மே.அருள்நாயகம், அ.சிவகுமார், ந.கோடீஸ்வரன், வெ.மகேஸ்வரன், உள்ளிட்ட உயர்தர ஆசிரியர்கள் கலந்துசிறப்பித்தனர்.

விடுகையுறும் மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முதல்வர் ஸ்ராலினுக்குப் புரிகின்றது யதார்த்தம் ஆதாயம் தேடுகின்றனர் சுயநல அரசியல்வாதிகள்

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்ராலினும் புரிந்து கொண்ட யதார்த்தத்ரத விளங்கிக் கொள்ளாத சுயநல அரசியல்வாதிகள் சிலர், அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் மீன் பிடிப் படகுகளை ஏலம் விடுவது தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளை சேர்ந்த சில அரசியல் பிரதிநிதிகளால் வெளியிடப் படுகின்ற கருத்துக்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோத மீன் பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பல மீன்பிடிப் படகுகள் உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், பாவனைக்கு உதவாதநிலையில் உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்படாமல் கைவிடப்பட்டிருந்த படகுகளே ஏலத்தில் விடப்பட்டுள்ளன எனவும், நீண்ட காலமாக இலங்கை கரை களில் அவை தரித்திருப்பதால், சூழல் மாசடைதல் உட்பட பல்வேறு அசௌகரியங்கள் எதிர் கொள்ளப்பட்ட நிலையிலேயே குறித்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், யதார்த்த நிலையினைப் புரிந்து கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்ராலின், சம்பந்தப்பட்ட படகுகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கு வதற்குத் தீர்மானித்துள்ளமையையும் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த விவகாரம் தொடர்பான புரிதல் இல்லாத வர்களே, இந்தியக் கடற்றொழி லாளர்களின் படகுகள் ஏலமிடப்படும் விடயத்தைத் திசை திருப்பும் வகையில் கருத்து தெரிவிக்கின்றனர் எனவும், அவை சுயலாப அரசியல் நோக்கங் கொண்டவை எனவும் தெரிவித்தார்.

### 25 நாள்களில் அச்சிடப்பட்ட பெருந்தொகையான பணம்!

இலங்கை மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை 26 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளதாக உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

2022 இல் மத்திய வங்கியால் அச்சிடப்பட்ட பணத்தின் அளவு 146 பில்லியன் ரூபா எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 18, 20 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இதுவரை மூன்று முறைபணம் அச்சிடப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதற்கமைய,146 பில்லியன் புதிய நாணயத் தாள்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இதற்கமைய, நாளொன்றுக்கு 6 பில்லியன் ரூபா என்ற வதையில், 25 நாள்களுக்கு 146 பில்லியன் பணத்தை அச்சிட்டுள்ளது.

### 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்!

#### பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவிப்பு



இலங்கையில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியின் மூன்றாவது டோஸான பூஸ்டர் டோஸை பெற்றுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நேற்றைய தினத்தில் 30 ஆயிரத்து 325 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸின் மற்றொரு சாத்தியமான அதிகரிப்பைத் தடுக்க, பூஸ்டர் டோஸைப் பெறுவதற்கு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை ஊக்குவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கம்பஹா மற்றும் கொழும்பில் கொரோனா பரவல் அதிகரிப்பு!

#### அமைச்சர் சுதர்சினி தகவல்



கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸின் பரவல் விரைவாக அதிகரித்துள்ளதுஎன இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கு அடுத்த இடத்தில் கொழும்பு மாவட்டம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாவிலிருந்து திரிபடைந்த ஒமிக்ரோன் வைரஸாலேயே பரவல் தீவிரமடைந்திருக்கலாமெனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அறிகுறிகள் இல்லாமல் நோயை ஏற்படுத்துதலே ஒமிக்ரோனின் தனித்தன்மை என்றபோதும் அவ்வாறு அறிகுறிகள் தென்படாவிட்டாலும் தொற்றுக்குள்ளானவருக்கோ அல்லது பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கோ உயிராபத்தும் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு வழமை நிலைமைக்குத் திரும்பியதே வைரஸ் பரவல் அதிகரிப்பிற்குக் காரணமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மின் உற்பத்தி நிலையம் நிறுவக்கூட கடந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## அமைச்சர் கனக ஹேரத் சாடல்

கடந்த அரசாங்கம் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்குக்கூட நடவடிக்கை எடுக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ள அவர் -

தற்போது ஏற்பட்டுள்ள மின் நெருக்கடி தொடர்பாகக் கடந்த அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகின்ற போதிலும், ஒரு மின் உற்பத்தி நிலையத்தைக்கூட நிர்மாணிப் பதற்கு அந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமார் 7 வருடங்களாக மின் உற்பத்தி நிலையம் இல்லை என சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், 2030 ஆம் ஆண்டளவில் 70 வீதம் புதுப் பிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம் சாத்தியமில்லாத வேலைத்திட்டம் அல்ல எனவும் அதுவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேலைத்திட்டம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



மறுபுறம், அந்தத் திட்டம் நமது நாட்டின் அந்நிய செலாவணியை சேமிக்கிறது எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபைக்குள் உள்ள சில குழுக்கள் இந்த வேலைத்திட்டத்தைச் சீர் குலைக்கும் வகையில் செயற்படுவதாகவும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க வில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் ஹேரத் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

### ஹெரோயினுடன் மூவர் சிக்கினர்!

வெவ்வேறு இடங்களில் ஹெரோயினுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக களுத் துறை, பாணந்துறைவடக்கு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அஜ்மீர் மாவத்தை யில், 21 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வாழைத் தோட்டத்தைச்சேர்ந்த 27 வயதுநபரேகைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவொல் மடுவத்த பிரதேசத்தில் 7 கிராம் 240 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒரு வர்கைதுசெய்யப்பட்டுள்ளார். இதம் பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுநபரேகைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பிரதேசத் தில் 6 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கல்கிஸை பிரதேசத்தைச்சேர்ந்த 47 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சர்வமதத் தலைவர்கள்திருகோணமலை விஜயம்



மன்னார் கரித்தாஸ் - வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை செ.அன்ரன் அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் மன்னார் வாழ்வுதய சர்வமத குழுவினர் நேற்று புதன்கிழமை காலை திருகோணமலைக்கான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலையில் உள்ள சர்வமதத் தலங்களைப் பார்வையிட்டதோடு, மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

சமய நல்லிணக்கமும், சமாதானமும் எனும் தொனிப்பொருளில் சர்வ மத தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் ஊடாக ஒவ்வொரு சமய விழுமியங்களைக் கற்றுக் கொள்ளவும், மதத் தலைவர்கள் மற்றும் சமயப் பிரதிநிதிகளுடனான உறவை வலுப்படுத்துவதாகவும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது திருகோணமலை சர்வமத செயற்திட்டத்தின் அனுபவப்பகிர்வும் இடம்பெற்ற நிலையில் புதன்கிழமை மாலை மேற்படி குழுவினர் மீண்டும் மன்னாரை வந்தடைந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2022இல் வெளியிடப்பெற்றது.